1981 ஏப்ரல் 2]

ஆ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் முதலமைச்சருக்கு எதிராக டேப் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினை என்னவாயிற்று? அதில் பிரைமாபேஸி கேஸ் இருக்கிறபொழுது அதை எடுத்துக் கொள்வதுதான் நியாயம். அதை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம்? கொடுத்து ஒரு வார காலம் ஆயிற்று. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்; நானும் கொடுத்திருக்கிறேன். என்னை மட்டும் அவசரம் அவசரமாக உடனே உரிமைக் குழுவிற்கு அனுப்பினார்களே. எனவே, அதையும் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சம்பந்தமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர், திடீரென்று கேட்டால் எப்படி பதில் சொல்வது? என் அறைக்கு வந்து கேளுங்கள்.

3. உரிமைப் பிரச்சினை,

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவை உரிமைப் பிரச்னை. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி. சொக்கலிங்கம் அவர்கள் "வானொலி" மீது ஒரு ஒழுங்குப் பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார். 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் அன்று தாம் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளாத போது அன்று மாலை "சட்ட மன்றத்தில் இன்று" என்ற தலைப்பில் வானொலியில் அவர் தம் உரையைப் படித்ததாக ஒலி பரப்பப்பட்டதாகக் கூறினார். அதை உரிமை மீறல் பிரச்சனையாக அறிவிப்புக் கொடுத்தால் எடுத்துப் பரிசீலிப்பதாக நான் தெரிவித்தேன். அன்றே மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் வானொலி மீது ஒரு உரிமை. மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்தார். இதுகுறித்து வானொலி இயக்குநருக்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டது. பேரவையில் இப் பிரச்சனை எழுப்பப்பட்டு விட்டதால் உரிமை மீறலாகப் பேரவையில் எடுக்குமுன் வானொலி இயக்குநரின் விளக்கத்தைப் பெற, இது குறித்து அவருக்கு எழுதப்பட்டது.

வானொலியிலிருந்து வந்துள்ள விளக்கத்தில் திரு. வெங்கடேசன் என்பதற்குப் பதிலாக திரு. சொக்கலிங்கம் என்று நிருபர் தவறாகக் குறிப்பிட்டார் என்றும், மேலும், 1981 ஆம்

ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் அன்று மாலையே திரு. வெங்கடேசன் எம். எல். ஏ. அவர்கள் இது குறித்து வானொலி நிலையத்தாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது இந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டது என்றும், மறுநாள் காலை 6-50 மணி செய்தி அறிவிப்பில் திருத்த அறிக்கை அளிக்கப்பட்டது என்றும், தவிர 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனையும், அதற்குப் பேரவைத் தலைவரின் தீர்ப்பும் ஒலிபரப்பப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அவர்கள் கடிதத்தில் பின்வருமாறும் கூறப்பட்டுள்ளது:—

"As the Hon. Speaker is aware that such mistakes are likely to occur in AIR News Services as in any other News Organisation".

பேரவை நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

பேரவை நிகழ்ச்சிகளை வெளியிடுவதில் தவறுகள் நேருமானல் அவை உரிமை மீறல் பிரச்சனை எழுப்பப்படலாம் என்பதால் இம்மாதிரியான தவறுகள் நேரலாம் என்று சமாதானம் கூறுவது சரியல்ல. தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்வதுடன், அவ்வாறு தவறுகள் நேருமிடத்து அத் தவறுகளுக்குத் திருத்தம் கொடுப்பதுடன், நேர்ந்துவிட்ட தவறுகளுக்கு வருத்தம் தெரிவிப்பதும் மரபாகும். எனவே இம்மரபை வானொலி பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

தற்போது நேர்ந்த தவறுகள் திருத்தப்பட்டபடியாலும் மேலும் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்வதாக வானொலி நிலையத்தார் தெரிவித்துள்ளதாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு சொக்கலிங்கம் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ள பிரச்சனையை வலியுறுத்தாமல் இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்,

திருச்சி மாவட்டத்தில் நிலவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப் பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் அன்பில் தர்மலிங்கம், ரா. உமாநாத், இரா. கருப்பையா ஆகியோர் ,, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமை அன்று திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம்,